செ.கு.எண் : 50

முதலமைச்சர் கலைஞர் அறிக்கை.

28.5.2008

மேட்டூர் அணையில் இந்த ஆண்டு 100 அடிக்கு மேல் நீர் இருப்பு இப்போதே இருப்பதால் – வருகின்ற ஜூன் திங்கள் 12ஆம் தேதியன்று காவேரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும்.

இதுகுறித்து விவசாயத்திற்குத் தேவையான விவசாயக் கடன், விதை, உரம் போன்றவைகளை உரிய நேரத்தில் அவர்களுக்கு வழங்கிட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளிடமிருந்து பல்வேறு முறையீடுகள் வந்த பிறகே மேட்டூர் அணை திறக்கப்படும் என்பதற்கு மாறாக இந்த ஆண்டு வேண்டுகோள் வருவதற்கு முன்பே மேட்டூர் அணை திறக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சி யுடன் விவசாயிகளுக்குத் தெரிவிக்கின்றேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9